விஷ பானம்



புதுப்பாளையம்

காந்தி ஆசிரமம்,

திருச்செங்கோடு.

விலை காலணா.

0-0-4



ஐயோ ! இந்தப் பாதகன் தன் மனைவியைக் கிணற்றில் பிடித்துத் தள்ளுகிறான். இக்கொடுமையை நாம் பார்த்துக் கொண்டிருப்போமா ? உடனே ஓடிச் சென்று இவ் வேழைப் பெண்ணைக் காப்பாற்ற மாட்டோமா ?

கள்ளு சாராயக் கடைக்குப் போகிறவன் ஒவ்வொருவனும் தன் மனைவியைக் கிணற்றில் தள்ளுகிறவனே யாவான். நாடெங்கும் நடக்கும் இப்பாதகத்தை எத்தனை காலம் நாம் பார்த்துக்கொண்டிருப்பது ?

விஷபானம்

கள் என்பது ஒரு வகை விஷபானம். பனங்கள், ஈச்சங்கள், தென்னங்கள் இவைகளுக்குள் கொஞ்சம் வித்தியாசமுண்டு. ஆனால் இவை எல்லாவற்றிலும் 100 க்கு 8 பங்கு மதுசாரம் கலந்திருக்கிறது. மதுசாரம் ஒருவகை விஷமேயாகும். அதனால்தான் கள் விஷபானமாகிறது.

கள்ளில் உணவுப்பொருள் ஒன்றும் கிடையாது; அதாவது உடம்புக்கு நன்மை கொடுக்கும் வஸ்து அதில் ஒன்றுமேயில்லை. தெளிவைப் புளிக்கவைத்தால் அது கள்ளாகிறது. தெளிவில் உணவுப்பொருள் உண்டு. ஆனால் அதுவே கள்ளானபின் அதில் உணவு சத்து சிறிதும் கிடையாது.

வீட்டில் உள்ள மனைவி மக்கள் பந்துக்கள் அனைவரும் வேண்டாம் என்று சொன்னாலும் அவர்களை ஏமாற்றிவிட்டுச் சென்று ஏழைகள் ஏன் குடிக்கிறார்கள்?

கள்ளுக் கடைக்காரர்களின் துர்ப்போதனையைக் கேட்டு ஏமாந்து போகலாமா? ஏழைகள் குடித்துக் கெட்டுப்போனால் கடைக்காரர்களுக்கு லாபம். அவர்களும் சர்க்காரும் பங்கு போட்டுக்கொண்டு பெருத்த லாபம் சம்பாதிக்கிறார்கள். ஏழைகள் பல பேருடைய பணம் சேர்ந்தார்போல் ஒருவனிடம் குவிந்தால் அவன் பணக்காரன் ஆகிறான். ஆனால் பல குடும்பங்கள் இதனால் அழிந்து போகின்றன. இதை நல்ல வியாபாரம் என்று சொல்ல முடியுமா?

கடைக்காரர்கள் நேராக வந்து போதனை செய்வதற்கு வெட்கப்படுகிறார்கள். ஆனால் பலவகையில் ஆசைகாட்டித் தூண்டி விடுகிறார்கள். அறியாத மூடர்கள் அவர்கள் வலையில் எளிதாகச் சிக்கிக்கொள்கின்றனர். அற்ப சௌகரியங்கள் செய்து கொடுத்தால் போதும்; ஏமாந்து போகிறார்கள். "மோட்டாரில் ஏறு

காசு கொடுக்கவேண்டியதில்லை" என்றால் போதும். இரண்டு புட்டி விஷம் குடிப்பதற்காக, குடும்பத்திற்குப் போடவேண்டிய சோற்றைப் பறிகொடுக்கிறார்கள்.

கள்ளுக்கடைக்காரன் தர்மத்திற்கா கடை வைத்திருக்கிறான்? கள்ளு விலையில் மோட்டார் வாடகையையும் அவன் சேர்த்து வாங்கிக்கொள்கிறான். இது தெரியாமல், காசில்லாமல் மோட்டார் சவாரி என்று நினைத்துக்கொண்டு மோசம் போகலாமா?

கடைக்காரன் ஒருவர் இருவருக்கு இலவசமாய்க் கள்ளு வார்ப்பதாய் ஏற்பாடு செய்துகொண்டு, ஊர் ஜனங்களைக் கூட்டி வரச் செய்வான். அவர்கள் தெரியாமல் இத்தூண்டுதலுக்கு உடன்படுகிறார்கள். ஒருவனுடைய பேச்சைக் கேட்டுப் பலர் கும்பலாய்ச் சேர்ந்து கடைக்குப் போய்க் கெடுவது அறிவுள்ள காரியமா?

கள்ளின் தீமைகளைச் சரியாய்த் தெரிந்து கொள்ளாமலும் சிலர் கெடுகின்றனர். "கள்ளில் என்ன கெடுதல் இருக்கிறது? இவ்வளவு நாளாய்க் குடித்து வந்தோமே?" என்றெண்ணி ஏமாந்துபோகிறார்கள். கள்ளில் 100-க்கு 8 பங்குதான் விஷம். ஆனால் அதைக் குடித்துவந்தால் நாளடைவில் விஷம் கொஞ்சம் கொஞ்சமாய் ஏறி உடம்பில் உள்ள உயிரைக் குடித்துவருகிறது. பிறகு, புத்தி தடுமாறுகிறது. கைவிரல்கள் நடுங்குகின்றன. கள்ளிலுள்ள மதுசார விஷம் உடம்பு, மூளை, இரத்தம் எல்லாவற்றையும் கெடுத்துவிடுகிறது.

அதிகமாய்க் குடித்து போதை உண்டாக்கிக்கொண்டால்தான் கெடுதல், கொஞ்சமாய்க் குடித்தால் தீமையில்லையென்று நினைப்பதும் தவறு. புத்தி சுவாதீனமில்லாமலிருப்பது போதை. ஆனால் தினம் கொஞ்சமாகக் குடித்துவந்தால் போதையில்லாமலே புத்தியின் வலிவு குறையும். மூடன், மூர்க்கன், அறிவீனன்போல் நடக்கச் செய்யும். ஒழுக்கம், மானம் இவைகளை விடச் செய்யும். முன் யோசனையின்றிக் காரியங்கள் செய்யத்தூண்டும். மனத்தெளிவையும் கூர்மையையும் கொன்று முரட்டுத்தனத்தை யுண்

டாக்கும். நல்ல ஆசைகளும் பெருமையான எண்ணங்களும் போய் மிருகத்தனம் குடி கொள்ளும். சோம்பேறித்தனம், சிற்றின்பப் பைத்தியம், வீண்பேச்சு, மரியாதைக் குறைவு, அடிமை புத்தி இவைகள் எல்லாம் வந்துசேரும். போதை என்பது இல்லாமலிருந்தாலும் இவைகள் வரும். ஆகையால் கள்ளைப்போன்ற விஷம் உலகத்திலேயே இல்லை.

"எட்டு நாளைக்கு ஒருதரம் கொஞ்சமாய்க் குடிக்கலாம்" என்று சிலர் தீர்மானிக்கிறார்கள். இந்தத் தீர்மானம் எத்தனை நாள் நிலைநிற்கும்? அது பிசாசு அல்லவா? கொஞ்சம் இடங்கொடுத்தால் நன்றாய்ப் பிடித்துக்கொள்ளுகிறது. வருமானம் என்ன, குடும்பத்தில் எத்தனைபேர், அவர்கள் எப்படிப் பிழைப்பது என்பதெல்லாம் மறந்துபோகிறது. உலகானுபவம் இதுவே. குடிக்கப் பயின்றவன் கொஞ்சமாய்க் குடித்துவிட்டு நிற்பதில்லை. குடிக்க ஆரம்பித்தவர்கள் எல்லாரும் பெருங் குடியர்களாய்த்தான் ஆகிறார்கள். மற்ற உணவுப் பொருள்கள் தின்றால், வழக்கம் ஏற்பட்டு, மறுபடியும் அதே தின்னலாமென்று கொஞ்சம் ஆசை உண்டாகிறது. ஆனால் கள்ளோ அவ்வளவில் நிற்பதில்லை. அதிலுள்ள மதுசார விஷத்தின் முக்கியமான துர்க்குணம் அதையே நினைத்து நினைத்துக் கவலைப்படும்படி செய்கிறது. கயிறுபோட்டு ஆட்டைக் கொலைக்களத்திற்கு இழுப்பதுபோல் மனிதனைக் கள்ளுக்கடைக்கு இழுக்கிறது. கையில் காசு இல்லாமல்போனால் பிச்சை யெடுக்கவோ, திருடவோ, மோசம் செய்யவோ, கொலைகூடச் செய்யவோ தூண்டிவிடுகிறது.

ஏழைகளை மேலே தலை தூக்காமல் செய்வது குடியே யாகும். குடியைவிட்ட ஜாதியார் நல்ல நிலையடைகிறார்கள். கள்ளுக்குடிக்கும் ஜாதிகள் எவ்வளவு உழைத்தாலும் தாழ்ந்த நிலையில்தான் இருப்பார்கள். "ஆனால் நீசனென்றும் குடியனென்றும் யெவருமில்லை ஜாதியில்." ஒட்டர், சக்கிலிகள், பறையர், பள்ளர் என்போர் குடித்துத்தான் பிழைக்கலாம் என்பது பெரும் பொய். அவர்கள் குடிப்பதினால்தான், மற்றவர்களைவிட அதிகம் உழைத்துப்

பணம் சம்பாதித்தாலும் வறுமையிலும், துக்கத்திலும், அழுக்கிலும் கிடந்து உழல்கிறார்கள். இரண்டு வருஷம் கள்ளைத் தொடுவது கிடையாது என்று விரதம் எடுத்துக்கொண்டால் மற்ற ஜாதியாரைப்போல் அவர்களும் உயர் நிலையடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அநேக ஊர்களில் நல்ல உபதேசங்கள் கேட்டு ஆதித்திராவிடர் குடிப்பதை ஒழித்துவிட்டார்கள். மேல் ஜாதி என்று சொல்லிக் கொள்ளும் மற்றவர்களைக் காட்டிலும் இவர்கள் வெகு சீக்கிரம் நல்ல நிலைமைக்கு வந்துவிடுவார்களென்பது நிச்சயம்.


ஒரு ஜாதியில் பெரும்பாலோர் கள்ளைக் குடித்துவந்தால் அது அந்த ஜாதி முழுவதையும் கீழே தள்ளுகிறது. ஆகையால் மேலே எழும் ஆசையுள்ள ஒவ்வொருவனும், தான் மட்டும் நல்ல ஒழுக்கத்திலிருப்பதோடு திருப்தியடையாமல், தன் சமூகத்தார் அனைவரையும் நல்ல மார்க்கத்திற்குக் கொண்டுவர முயலவேண்டும்.

இதுவரையில் தேசத்தில் அரசாங்கத்தாரோடு யுத்தம் நடந்து வந்தது. அது இப்போது ஜெயமாக முடிந்து, சிறைக்குப் போனவர்கள் எல்லாரும் வெளி வந்துவிட்டார்கள். சர்க்கார் சமாதானத்திற்கு வந்திருக்கிறார்கள். சுயராஜ்யம் கொடுத்துவிடுகிறோம், ஆனால் கொஞ்சம் பாதுகாப்புகள் செய்துவிட்டுப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். மகாத்மா காந்தியை அழைத்து ராஜி பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் ஒரு போர் முடிந்து இப்போது மற்றொரு பெரும்போர் துவக்கியிருக்கிறோம். இது கள்ளுக்குடியர்களுடன் செய்யும் போர். இதுவும் சாத்வீகப் போர்தான். ஒவ்வொரு சமூகத்தாரும் தங்களுக்குள் கள்ளு சாராயம் குடிப்பவர்களுடன் சாத்வீகப் போர் புரியவேண்டும். கள்ளரக்கனை ஒழிக்கவேண்டும். இதுவும் மகாத்மாவின் யுத்தந்தான். அனைவரும் இதற்குத் துணை புரியவேண்டும்.

இயந்திரங்களில் சிறந்தது


இது ஒரு அழகான கடிகாரம். இதன் விலை ஆறு ரூபாய்.




சரியாய்ப் பார்த்துக்கொண்டால் ஐந்து வருஷம் ஓடும். நேரத்தைத் தவறில்லாமல் காட்டும். திறந்து பார்த்தால் உள்ளே அநேக சக்கரங்களிருப்பது தெரியும்.




இது ஒரு புகை வண்டி என்ஜின். இது எத்தகைய பாரத்தையும் இழுக்கும். மணிக்கு 40 மைல் வேகமாய் ஓடும். இதையும் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் ஓடாது.






இது ஒரு மோட்டார் வண்டி. எந்தப் பாதையிலும் மிகவேகமாய் ஓடும். வெகு நல்ல இயந்திரம். இதன் விலை ரூ. 4,000.


இது ஒரு கப்பல். இது கடலில் ஓடுவதற்குக்காற்று வேண்டியதில்லை. இயந்திரத்தினலேயே ஓடும். பதினாயிரம் மைல் தூரம் கடல் மேல் செல்லும். வியாபாரத்திற்கு அநேக கோடிக் கணக்கான மூட்டைகள் சுமந்து செல்லும்.








இவையெல்லாம் மின்சார இயந்திரங்கள். இங்கே 'தந்தியில் பேசினால் ஒரு வினாடியில் ஆயிரம் மைலுக்கு அப்பால் தெரிந்துகொள்வார்கள். இவைகளையும் வெகு ஜாக்கிரதையாகக் கெட்டுப்போகாமல் பார்த்துக் கொண்டால்தான் வேலை செய்யும். இயந்திரத்தில் ஏதாவது பிசகு நேர்ந்தால் வேலை செய்யாது.



இந்த ஆச்சரியமான இயந்திரங்கள் எல்லாவற்றிலும் மிகவும் ஆச்சரியமான இயந்திரம் மனிதனுடைய தேகமும் மூளையும் ஆகும். எத்தகைய கடிகாரமும் இதற்கு சமானமாகாது. எத்தகைய புகை வண்டி அல்லது மோட்டார் அல்லது தந்தியும் இதைப் போன்ற திறமையான இயந்திரமாகாது.



இந்த தேகத்திற்கு என்ன விலை மதிப்பிடலாம்? கோடி ரூபாய் கொடுத்தாலும் இந்த இயந்திரத்தை நம்மால் செய்யமுடியாது. கடிகாரத்திலும் மோட்டாரிலும் சக்கரங்களே தவிர, சுயமான புத்தி கிடையாது. கெட்டுப் போனால் சீர்ப்படுத்த மனிதன் வேண்டும். எத்தனை யுக்திகள் அடங்கிய இயந்திரமானாலும் அதை நடத்த ஒரு மனிதன் வேண்டும். தடை ஏற்பட்டால் தவிர்த்துக்கொள்ள அதற்கு சுயமான சக்தியில்லை. மனிதனுடைய தேகமோ அப்படியல்ல. தன்னைத் தானே அது நடத்திக்கொள்ளும். தன்னைத் தானே பழுது பார்த்துக்கொள்ளும் விசித்திர சக்தியும் அதற்குண்டு. பகுத்தறிவு என்னும் அதி நுட்பமான

சக்தி அந்த இயந்திரத்தின் ஒரு சிறப்பான அமைப்பு. ஐந்து ரூபாய் விலையுள்ள ஒரு கடிகாரத்தை குழந்தையிடம் கொடுக்க மாட்டோம்; கெடுத்துவிடும் என்று பயம். எந்த இயந்திரத்தையும் சரியாய்ப் பாதுகாப்பவனிடம்தான் கொடுப்போம். ஆனால் மனிதனுடைய புத்தியும் பகுத்தறிவும் தேக அமைப்புகளும் கெட்டுப் போகும்படி கள்ளையும் சாராயத்தையும் உள்ளே கவலையின்றிச் செலுத்துகிறோம். கொஞ்ச நேரம்தான் கெட்டிருக்கும், பிறகு சரியாய்ப் போகும் என்று எண்ணி அம்மாதிரி மூர்க்கத்தனமான காரியம் செய்கிறோம். பூதக் கண்ணாடி வைத்துப் பார்த்தாலும் மூளையின் நுட்பமான அமைப்புகளை அறிவது கஷ்டம். இத்தகைய நல்ல இயந்திரத்தை முரட்டுத்தனமாய்க் கெடுக்கிறோம். கடிகாரம் அல்லது மோட்டார் இயந்திரத்தில் மணலைப் போட்டு அது தட்டுத் தடுமாறிப்போவதைப் பார்த்து வேடிக்கையென்று நினைப்போமா? ஆனால் நம்முடைய மூளையை மதுபானத்தால் அவ்விதம் செய்து அதுவே ஒரு சுகமென்று நினைக்கிறோம். இது எவ்வளவு அறியாமை! தினம் ஒரு தடவை கெட்டுப்போய், தட்டுத்தடுமாறி, தலைகீழாக நடத்தப்பட்டுவந்தால் எந்த இயந்திரம்தான் தாங்கும்? விலை மதிப்பற்ற மிகச் சிறந்த ஒரு இயந்திரத்தை மூடத்தனமாய்ப் பாழ்படுத்துகிறோம்.

சுக்குட்டிக்கு புத்தி வந்தது

இராம முதலி வீட்டுக்கும் அவன் மாமன் மகன் சுக்குட்டி என்கிற சுப்பிரமணிய முதலியின் வீட்டுக்கும் நடுவில் ஒரு சுவர் தான். ஒவ்வொரு நாளும் அந்தி நேரம் வெளிச்சமிருக்க, சுக்குட்டி வீட்டு வாசலில், அவன் சினேகிதர்கள் பழனி முதலியும் சொக்க நாதனும் வருவார்கள்.

பழனி—அண்ணே !

சுக்குட்டி—ஓய் ! வந்து விட்டீர்களா ?

சொக்கநாதன்—ஆமாம், வா, போகலாம்.

சுக்குட்டி—இன்னும் ஒரு முழம் நெய்யலாமென்றிருக்கிறேன்.

பழனி—தினம் நீ இப்படித்தான் சொல்வாய், நெய்வது எப் போதுந்தானிருக்கிறது. வா போகலாம்.

பிறகு சுக்குட்டி நெசவு வேலையை நிறுத்திவிட்டு வெளியே வருவான். எல்லாரும் சேர்ந்து போவார்கள்.



இதை இராம முதலி தினமும் தன் தறியண்டை உட்கார்ந்தே கேட்பான். அவர்கள் தெருவு கடந்து போனதும் தன் மகள் வள்ளியைக் கூப்பிடுவான். "வள்ளி, உன் சொப்பைக் கொண்டுவா!" என்பான்.

வள்ளி தார் சுற்றிக்கொண்டிருப்பாள். அவள் எழுந்து உள்ளே போய்ப் பரணி யிருந்து ஒரு பழைய மண் சொப்பைக் கொண்டு வந்து அவன் முன் வைப்பாள். அதன் மேல் ஒரு மஞ்சள் துணி கட்டியிருக்கும். அதை இராம முதலி மெதுவாய் அவிழ்த்து அதில் நான்கு அணு போடுவான்.

"சுக்குட்டி இன்னிக்கு நாலணு கள்ளுக்கடைக்காரனுக்குக் கொடுப்பான்" என்று சொல்லி மறுபடியும் சொப்பைத் துணியால் மூடிக் கட்டிவிட்டு எடுத்துக் கொண்டுபோய் வைக்கச் சொல்லு வான்.

மறுநாளும் இப்படியே. "போதும், வாடா போகலாம்" என்று வாசலில் பழனி முதலி சொல்வது கேட்கும்.

"வள்ளி!" என்பான் இராம முதலி. சுக்குட்டி வேலையை நிறுத்திவிட்டு வீதிக்குப்போவான். வள்ளி சொப்பைக் கொண்டு




வந்து தன் தகப்பன் முன் வைப்பாள். மறு படி நாலு அணு அதில் இராம முதலி போடு வான். பிறகு வள்ளி சொப்பைக் கொண்டு போய்ப் பரணில் வைத்துவிடுவாள். சுக் குட்டி கள்ளுக்கடைக்குச் சென்று பணம் கொடுத்து இரண்டு சீசா கள்ளு வாங்கிக் கண்ணை மூடிக்கொண்டு குடிப்பான்.

இப்படியே நாள் தவறாமல் நடந்தது. இராம முதலி சொப்பில் காசு நிறைந்துகொண்டே வந்தது. சுக்குட்டி சம்பாதிக்கும் காசு நாலு நாலு அணுவாய்க் கள்ளுக்கடைக்காரனுக்குப் போய்க்கொண் டே வந்தது. நாலு அணுவுக்குமேல் குடிக்கக் கையில் காசு இல்லையே என்று சுக்குட்டி வருத்தப்பட்டுக்கொண்டே யிருப்பான். வள்ளி தன் சொப்பில் பணம் நிறைந்துகொண்டு வருவதைப் பார்த்து மகிழ்வாள்.

சுக்குட்டி வயிற்றில் தினமும் போன கள்ளு தன் வேலை செய்ய ஆரம்பித்தது. காலை எழுந்ததும் சுக்குட்டிக்குக் கொஞ் சம் தலைவலி. கண் விழி சிவந்துகொண்டு வந்தது. பேச்சு குடிகாரன் பேச்சாயிற்று. வீட்டில் மனைவியுடனும் தாயாருடனும் சண்டை. சந்தைச் செலவு என்றால் எப்போதும் திண்டாட்டம்.

மாதம் பன்னிரண்டாயிற்று. ஒரு நாள் காலை சுக்குட்டியின் தாயார், கிழவி, வீட்டுக்கு முன்னால் சாணி ஜலம் போட்டுக்கொண டிருந்தாள். வாசலில் இராம முதலி ஒரு மயிலைப் பசுமாட்டைப் பிடித்துக்கொண்டு எங்கிருந்தோ வந்தான். ஓர் இளங் கன்றுக் குட்டி பசு மாட்டின் மடியில் தலையை வைத்தும் ஓடிக் குதித்தும் விளையாடிக்கொண்டிருந்தது.



"ஏய்!" என்று உள்ளே இருந்த தன் மனைவியைக் கூப்பிட்டான்.

"யாருடையது பசுமாடு?" என்றாள் சுக்குட்டியின் தாயார்.

"நான் தான் நேற்று மேச்சேரியில் வாங்கினேன்" என்றான் இராம முதலி

"அப்படியா? உனக்கென்ன மகாராஜனுக்கு? எங்களைத்தான் தரித்திரம் பிடுங்கித் தின்கிறது" என்றாள் கிழவி.

"ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?" என்று இராம முதலி சொல்லிவிட்டுத் தன் மனைவி கையில் மாட்டின் தும்பைக் கொடுத்தான்.

"நீ நெய்து கூலி சம்பாதிக்கிறாய். என் மகனுக்கும் அதே கூலிதான் வருகிறது. ஆனால் எல்லாம் எங்கேயோ பாழாய்ப் போகிறது. எப்போதும் திண்டாட்டமாய்த்தா னிருக்கிறது. மாடு நல்ல ஜாதி. என்ன கொடுத்தாய் அப்பனே?" என்றாள்.

"70 ரூபாய் கொடுத்தேனம்மா."


"எழுபது ரூபாய்! ஆமாம், இல்லாமல் கறவை மாடு வருமா?" என்றாள்.

"வள்ளியக்கா சொப்பில் சேர்ந்த காசுதான். இன்னும் 20 ரூபாய் இருக்கிறது. அதற்கு நாளை செவ்வாய்ச் சந்தையில் தவுடும் பருத்திக் கொட்டையும் வாங்கிப் போடலாமென்றிருக்கிறேன்!" என்றான்.

"வள்ளியக்கா சொப்பில் எப்படி இத்தனை பணம் சேர்ந்தது?" என்றாள் கிழவி.

"உன் மகன் தினமும் கள்ளுக்கடையில் போடுகிற காசைத் தான் நானும் தினம் வள்ளியக்கா சொப்பில் தவறாமல் போட்டு வந்தேன். அது சேர்ந்து இந்தக் கறவை மாடு வாங்கினேன்!" என்றான்.

இதோடு கதை முடியவில்லை. அதற்குமேல் ஆறுமாத மாயிற்று. சுக்கட்டி தாயார் என்ன சொன்னாலும் அவன் கள்ளுக்கடைக்குப் போவதை விடவில்லை. "நான் சம்பாதித்த காசுக்கு யார் என்ன சொல்வது ?" என்று சண்டை போடுவான். கிழவியை அடிப்ப துமுண்டு. ஆறுவது மாதம் ஊரெல்லாம் ஒரு விஷ ஜுரம் வந்தது. இராம முதலிக்கும் வந்தது. பத்து நாள் படுக்கையில் கிடந்தான். சுக்கு, மிளகு கஷாயம் தான் மருந்து. சொஸ்த மாயிற்று. மறுபடி தறியண்டை உட்கார்ந்தான். இராம முதலி படுக்கையிலிருக்கையிலேயே அடுத்த வீட்டில் சுக்குட்டிக்கும் ஜுரம் வந்தது. பத்து நாளாயிற்று; இருபது நாளாயிற்று. எழுந்திருக்க முடியவில்லை. வீட்டில் சோற்றுக்குத் திண்டாட்டம் சொல்லமுடியாது.



என்ன, "கனகம்மா, உன் புருஷனுக்கு பத்து நாளில் சொஸ்தமாயிற்று. என் மகனுக்கு ஏனோ இன்னும் ஜுரம் நிற்கவேயில்லையே" என்று சுக்குட்டியின் தாயார் வந்து இராம முதலி மனைவியுடன் சொல்வாள்.

"எல்லாம் தெய்வச் செயல்" என்பாள் அவள்.

"இந்த தெய்வம் எங்களை என்று கண் திறந்து பார்க்குமோ ?" என்றாள் கிழவி.

"அப்படியில்லையம்மா" என்று இராம முதலி சொன்னான்.

"வேறு என்ன ? எல்லாம் விதிதான்" என்று கனகம்மா சொன்னாள்.

"உனக்குத் தெரியாது. நேற்று சேலத்திலிருந்து பெரிய டாக்டர் வந்து எல்லாருக்கும் ஊசி குத்திவிட்டுப் போனாரே, அவர் கள்ளுகுடியாதவர்களுக்கு வியாதி சீக்கிரம் சொஸ்தமாகும் என்றும், குடிப்பவர்களுக்கு மருந்து பிடிப்பது கஷ்டம் என்றும் சொன்னார்.

கள்ளும் சாராயமும் உடம்பில் இரத்தத்தைக் கொன்று விடுகிறது” என்று சொன்னார்.

“அதெல்லாம் வீண் வார்த்தை. விதிக்கு மேலெது?” என்றாள் கனகம்மா.

ஒரு மாதம் எப்படியோ கழித்துத் தட்டுத் தடுமாறி சுக்குட்டி படுக்கையை விட்டு வெளியே வந்தான். வியாதி சொஸ்தமாயிற்று. ஆனால் வேலைசெய்ய முடியவில்லை.

இராம முதலி திண்ணையில் உட்கார்ந்து பல் தேய்த்துக் கொண்டிருந்தான். அவனிடம் சுக்குட்டி மெள்ள வந்து உட்கார்ந்தான்.

“அத்தான்! இந்தக் கள்ளை இனிமேல் நானும் விட்டுவிடலாமென்றிருக்கிறேன்” என்றான் சுக்குட்டி.

“அதற்கு மேலானது ஒன்றுமில்லை” என்றான் இராம முதலி.

“இதோ இன்று கோயிலுக்குப்போய் சாமி முன் சத்தியம் செய்யப்போகிறேன். பிறகு நானும் சொப்பில் காசு போடப் போகிறேன். உனக்கு மாத்திரம் பசுமாடு ஏன்? என் வீட்டில் பாலுக்கும் மோருக்கும் செலவு இல்லையா?” என்றான் சுக்குட்டி.

“அப்படியே செய். நானும் கோயிலுக்கு வருகிறேன். இன்று அமாவாசை, சுவாமி கும்பிட்டு நானும் ஒரு தேங்காய் உடைக்கலாம்” என்றான் இராம முதலி.



துணுக்குகள்

தெளிவினின்று கள்ளு உண்டாகும்; இது கடைகாரனுக்குத் தெரியும். கள்ளினின்று கண்ணீர் உண்டாகும்; இது குடிக்கிறவனுக்குத் தெரியும்.

கள்ளுக்கடைகளுக்குப் போய் மிஞ்சியதுதான் மற்றக் கடைகளுக்குப் போகும். மற்ற வியாபாரம் பெருக வேண்டுமானால் கள்ளை யொழியுங்கள்.

கள்ளுக்கடை சாராயக்கடையினால் விளையும் பயனைப்பார்க்க வேண்டுமானால், போலீஸ் கச்சேரிக்கும் செஷன் கோர்ட்டுக்கும் போய்ப் பார்க்கலாம்.

பெருங்குடிகாரன் ஒவ்வொருவனும் ஆரம்பிக்கும்போது மிதமாய்த்தான் குடித்தான்.

என்ன தடுத்தாலும் கொலையும் களவும் நிற்பதில்லை. அதற்காக ஏலம் விட்டுச் சிலபேருக்குக் கொலையும் களவும் செய்ய லைஸென்சு கொடுக்கமுடியுமா ?

கள்ளுக்கடையை எடுத்துவிடலாமா கூடாதா என்று குழந்தைகளைப் பெற்ற தாய்மார்களைக் கேட்டுப்பார்.

குடியினால் இரண்டு விதத்திலும் நஷ்டம். சம்பாதிப்பதும் குறையும்; வந்த பணமும் வீணாய்ப்போகும்.

எப்போதாவது குடிப்பேன் என்கிறவன் முடிவில் எப்போதும் குடிப்பவனாவான்.

குடித்தால் பலம் என்று எண்ணாதே. செக்கு இழுக்கும் மாடும், வண்டி பாரம் இழுத்துக்கொண்டு ஓடும் குதிரையும் தண்ணீர்தான் குடிக்கும். குடித்தால் தைரியம் என்று எண்ணாதே. காட்டு யானையும், புலியும், சிம்மமும் கூடத் தண்ணீர்தான் குடிக்கும்.

மதுசாரம்

மதுசாரம் தண்ணீரைப் போன்ற ஒரு திரவப் பொருள். அதற்கு ஒருவித நாற்றமுண்டு. திரவப் பொருளானாலும் அது தாகத்தைத் தணிக்காது. தண்ணீரின் குணத்துக்கு நேர் மாறான எரிக்கும் குணம் அதற்குண்டு. ஆகையால்தான் சாராயம், பிராந்தி, வுஸ்கி இவைகளில் வெகு சீக்கிரம் நெருப்புப்பற்றிக் கொள்கிறது. சுத்த மதுசாரத்தை அதாவது தண்ணீர் கலவாத தனி மதுசாரத்தைக் குடிக்க முடியாது. குடித்தால் அது தொண்டையை உடனே சுட்டுப் புண்ணாக்கிவிடும்.

கள்ளு, பீர் இவைகளில் மதுசாரம் குறைவு. ஒயினில் அதை விட அதிகம். சாராயம், ஜின், ரம், பிராந்தி, வுஸ்கி இவைகளி லுள்ள மதுசார அளவு மற்றவைகளிலுள்ளதைவிட அதிகம். பீரில் 100 க்கு 4 பங்கு முதல் 7 பங்குவரையில் மதுசாரம் இருக்கும். கள்ளில் 100 க்கு 8 பங்கு முதல் 12 பங்குவரையில் இருக்கும். ஒயினிலும் அநேக டானிக் "மருந்து" களிலும் 100 க்கு 15 முதல் 25 பங்குவரையில் மதுசாரம் கலந்திருக்கும். சாராயத்தில் 100 க்கு 40 பங்கு மதுசாரம். ஜின், ரம், பிராந்தி, வுஸ்கி இவைகளில் 100 க்கு 50 வரை மதுசாரம் உண்டு.

எல்லா மதுபானங்களிலுமுள்ள விசேஷ குணம் போதை. இதற்குக் காரணம் அப்பானங்களிலுள்ள மதுசாரந்தான். மனி தனுடைய உணர்ச்சி, புத்தி, ஞாபகம், விவேகம், தேகத்தின் அங்கங்களை நடத்தும் சக்தி இவைகளுக்கெல்லாம் மூலஸ்தானம் மூளையாகும். இந்த மூளையானது தன் இயற்கையமைப்பை இழந்து, தான் செய்யவேண்டிய வேலையை சரிவரச் செய்யும் சக்தியற்றுத் தடுமாறுவதர்க்குப் பெயர்தான் போதை. ஒருவன் எவ்வளவு புத்தி குறைவான மனிதனானாலும், சாதாரணமாய் அவனுடைய மூளை சுபாவக்கிரமம் தவறாமல் வேலைசெய்யும். ஆனால் ஒருவன் எவ்வளவு புத்திசாலி யானாலும் அவனுக்குப் போதை யுண்டாகிவிட்டால் கீழ்மேல் தெரியாமல் தடுமாறுவான். சாதாரண இந்திரக்கல்லானாலும் அச்சு சரியாய் நின்றால் அது தன் வேலையைச் செய்யும் ஆனால் எவ்வளவு உயர்ந்த இயந்திர மாயிருந்தபோதிலும், சக்கரங்கள் கெட்டிருந்தால், வேலைசெய்யா தல்லவா ?

மதுசாரம் ஒருவித விஷம். அந்த விஷம் இரத்தத்துடன் கலந்து மூளைக்குச் செல்கிறது. அங்கே நுட்பமான நரம்பு ஸ்தா னங்களையும், தேகத்தையெல்லாம் நடத்தும் மின்சார ஜீவ சக்தி யையும், விவேக மென்னும் தெய்வீக சக்திக்கு இருப்பிடமான கேந்திரத்தையும் அது கெடுத்து விடுகிறது. இதனால்தான் மது பானம் செய்த மனிதனுடைய எண்ணமும், பேச்சும், செயலும், மதுசார விஷம் ஏறிய அளவுக்கு, இயற்கை வழி தவறிச் செல்கின் றன. ஆனால் மனிதனிடம் இயற்கையாக யுள்ள ஜீவசக்தி முழு தும் உடனே தோல்வியடைவதில்லை இந்த ஜீவசக்தியானது மது சார விஷத்துடன் போர் செய்து வென்று மனிதனுடைய மூளையை இயற்கை நிலைக்குக் கொண்டுவரும். இதனால்தான் போதை


தெரிகிறது. ஆனால் இப்படி எவ்வளவு காலந்தான் அக்கொடிய விஷத்தை எதிர்த்து நின்று போர் செய்ய முடியும்? நாளடைவில் இயற்கை சக்திக்கும் பலம் குறைந்து போகும். அதன் பின்னர் உள்ளே செல்லும் மதுசார விஷம் தீராத நோய்களை உண்டாக்கும்.

மதுசாரத்திற்குத் தண்ணீருடன் அதிவிரைவாகக் கலந்து கொள்ளும் இயல்பு உண்டு. ஆகையால் தேகத்திலுள்ள ஈரத்தை அது இழுத்துக்கொள்ளும். இவ்வாறே சோறு முதலிய உணவுப் பொருள்களுடன் சேர்ந்தால் அவற்றிலுள்ள ஈரத்தை இழுத்துக்கொண்டு உலர்த்திவிடும். உடம்பிலுள்ள ஈரத்தை மதுசாரம் எடுத்துக்கொண்டு விடுவதினால்தான் மதுபானம் செய்தவனுக்கு அதிக தாகம் உண்டாகிறது.

கள்ளு, சாராயம், பிராந்தி, உஸ்கி முதலிய பானங்களெல்லாம் நரம்புத் தளர்ச்சி உண்டாக்கும். இவைகளால் தேகத்திற்குச் சக்தியுண்டாகுமென்று சாதாரண ஜனங்கள் நம்புவது முற்றிலும் தவறு. குடித்தவுடனே உண்டாகும் உற்சாகம் ஒரு மோசடி. அது சக்தியின் அடையாளமல்ல. மனதில் தோன்றும் எண்ணங்களையும், பேச்சையும், செயலையும் அடக்கியாண்டு வேண்டிய துறைகளில் செலுத்துவது மதி. இந்த மதியை முதலில் மதுசார விஷம் தாக்குகிறது. எஜமானன் வீட்டில் இல்லாமற் போனால் வேலைக்காரர்கள் கூத்தாடி விளையாடி வேண்டியதைச் செய்வார்கள். உபாத்தியாயர் தூங்கினால் குழந்தைகள் கொண்டாட்டமாகத் தடையின்றி விளையாடுவார்கள். இம்மாதிரிதான் மதுசார விஷம் மூளைக்கேறி மதி தன் வேலையைச் செய்ய முடியாமல் தடுமாறிப் போனதும், மதியின் வேலைக்காரர்களான நரம்புகள் ஒழுங்கும் கட்டுப்பாடும் இன்றி இஷ்டப்படி கூத்தாடும். இதைத்தான் உற்சாகம் என்று நாம் தவறாக எண்ணுகிறோம். நாளாக ஆக, விஷம் அதிகமாக ஏறி எல்லா நரம்புகளும் தளர்ச்சி யடைந்துவிடுகின்றன.

மதுசாரத்திற்கும் நல்ல உபயோகம் உண்டு. அநேக இயந்திரங்களில் இதை உபயோகித்துப் பலவேலைகள் செய்விக்கலாம். இரஸாயனத் தொழில்களில் அது மிகவும் பயன்படும். ஆனால் அதை மனிதனுடைய தேகத்திற்குள் செலுத்தி மூளையையும் ஆரோக்கியத்தையும் கெடுத்துக்கொள்ளுதல் பெரும் அறிவீனமாகும்.

பத்து வருஷத்திய கணக்கு.



வாரத்திற்கு ஒரு ரூபாய் கள்ளுக்கடையில் செலவு செய்தவன்; 10 வருஷத்திற்குப் பிறகு அவனுக்குக் கிடைத்தது, ஒரு குவியல் உடைந்த சீசாக்களும் மொந்தைகளும்தான்.

கள்ளு சாராயம் தொடாத குடியானவன் ஆடுமாடுகள், வீடு வாசல், மக்கள் மனைவியுடன் சுகமாக யிருக்கிறான்.

மதுபானக் கும்மி

கல்லாத மாந்தருக் கெத்தனை தான்புத்தி
காதிலுரைத்தாலு மேறாது
அல்லாத மாந்தரே கெட்டமதுவை
யருந்திக் கெடுபவர் மானிடனே.

நோய்க்கு மருந்துக்குத் தேகவலுப்புக்கு
நோவுக்கு வாய்வுக்கு ஓய்வுகெனச்
சாக்குகள் போக்குகள் சொல்லிக் குடிப்பது
தான்கெடப் பந்தயம் மானிடனே.

வேடிக்கை யாக முதலி லிருந்திடும்
மெல்லமெல்லக் கூடிப் பள்ளத்திலே
தேடி விழுத்தி யெதற்கு முதவாத
தீயவ னாக்கிடும் மானிடனே.

கொஞ்சம் மறைவாய்க் குடித்து முதலிலே
கூட்டாளி சேர்ந்தபி னொட்டமுட
னஞ்சாமற் கள்ளுக் கடைக்கேயுன் ஆயுளை
யர்ப்பணஞ் செய்திடும் மானிடனே.

கஞ்சி குடிக்க வழியற்ற பேருங்
கடன்பட்டுக் காசை முடிந்துகொண்டு
கொஞ்சமும் வெட்கமில்லாமல் வெறிநீர்
குடிப்பது புத்தியோ மானிடனே.

காசைக்கொடுத்துக் கருத்தழிந்தே கெட்டுக்
கைப்பொரு ளற்றுக் கவலையுடன்
நீசத்த னமான பேரைப் பெறுவது
நீதியோ நீசொல்லு மானிடனே.

பாடுபட்டுக் காலை யந்தி வரைக்கும்
பசியுடன் வேர்வை நிலத்தில் விழக்
கூலிக்கு வேலைசெய் யற்பப் பணத்தைக்
குடித்து வெறிக்காதே மானிடனே.

தன்மனை தாய்தங்கை வேற்றுமை யற்றுத்
தடுமாறி யுள்ளுணர் வில்லாதே
இன்னிலை கெட்டு விலங்குகள் போல
விருப்பர் குடிகாரர் மானிடனே.

சாந்த நிலையிலிருக்கு மொருவர்க்குச்
சாராய வர்க்கத்தி லொன்றளித்துக்
கூர்ந்து கவனித்தா லன்னவர் தன்மை
குணதோஷங் காணலாம் மானிடனே.

நீதிக்கு மாறு செயவேணு மென்று
நினைப்பவர் கொஞ்சங் குடிக்கவேணும்
ஏதுசெ யவேணு மாகிலுஞ் செய்விக்கு
மென்ப தறிந்துகொள் மானிடனே.

துட்ட மிருகமும் பாம்புஞ் சிலபோது
துன்பஞ் செயாமல் விலகிவிடும்
கெட்ட குடிகாரன் நேசமெப் போதுமே
கேட்டை விளைவிக்கும் மானிடனே.

சாராயம் கள்ளபின் தீய குடிவகைச்
சாப்புடன் குத்தகை கொண்டுபல
ஏராள மாகப் பணம்படைத் தோர்களும்
ஏங்கிக் கெடுவாரே மானிடனே.

தீயவழியில் வரும்பொரு ளெந்நாளுந்
தீமையைச் செய்து சிலநாளில்
மாயமாய் நின்ற பொருளையுங் கொண்டு
வருந்த வொழிந்திடும் மானிடனே.

சென்னை ஹிந்தி பிரசார அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கபட்டு
சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரால் பிரசுரிக்கப்பட்டது.